# இறைத்தூதன்

## கத்தோலிக்க வார இதழ்

இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும்; வேறு ஒன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது. எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். (மத் 5:13-15)

# பினாங்கு, நல்லிணக்கத்தின் திருத்தலம் 'மைனர் பசிலிக்கா' ஆனது





<u>பினாங்கு, புக்கிட் மெர்தாஜாம் நகரில் அமைந்திருக்கும் புனித அன்னம்மாள் திருத்தலம் இப்போது மைனர் பசிலிக்கா' அந்தஸ்தைப் பெற்றது.</u> மிக அரிதாகக் கிடைக்கக்கூடிய "பசிலிக்கா" என்ற அந்தஸ்தைப் பெற்ற இந்த புனித அன்னம்மாள் பேராவயம் 'நல்லிணக்கத்தின் திருத்தலம்' என்றும் அழைக்கப்பட்டது பலருக்கு நினைவிருக்கலாம். கடந்த 2019-ம் ஆண்டு, செப்டம்பர் 5-ம் திகதி, வத்திக்கானின் திருவழிபாட்டு ஆணையம் இந்த அந்தஸ்தை இத்திருத்தலத்திற்கு வழங்கியது. ஆனாலும், பெருத்தொற்றின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, கடந்த சனவரி மாதம் 9-ம் திகதி, புகழ்பெற்ற இந்த திருத்தலம் 'மைனர் பசிலிக்கா' என அதிகாரப்பூர்வமாகப் பிரகடனம் செய்யப் பட்டது.

மலேசியா, சிங்கப்பூர், புரூணை, தாய்லாந்து, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து அருள்பணியாளரகள், துறவற சபையினர் உட்பட சுமார் 2,000 பேர் கலந்து கொண்ட இந்த வரலாற்று நிகழ்வு மலேசியா திருஅவை வரலாற்றில் நிகழ்ந்த முதல் நிகழ்ச்சி என்றால் மிகையாகாது.

அன்று கொண்டாடப்பட்ட திருப்பலியில் பினாங்கின் முதலமைச்சர் செள கோன் இயோவ், நிதி துணை அமைச்சர் II, மற்றும் புக்கிட் மெர்தாஜாம் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீவன் சிம் சீ கியோங், பாகன் நாடாளுமன்ற உறுப்பினர் லிம் குவான் எங் மற்றும் பிற மாநிலத் தலைவர்களும் சிறப்பு வருகையாளர்களாக கலந்து சிறப்பித்தனர்.

மைனர் பசிலிக்காவின் பாடகர் குழுவின் தலைமையில் புகழ் ஆராதனை வழிபாட்டுடன் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின. கத்தோலிக்க சமூகத்தில் இருக்கும் கலாச்சார பன்முகத்தன்மையைக் குறிக்கும் வகையில் இரண்டு கலாச்சார நடனங்களும் இடம்பெற்றன. சிங்கப்பூர் பேராயர் கர்தினால் வில்லியம் கோ, பினாங்கு ஆயர் மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து பன்மொழி திருப்பலிக்குத் தலைமை தாங்கினார். அருள்தந்தை மைக்கல்சியா அவர்கள் தொடக்கத்தில் இலத்தின் மொழியிலும் பின்னர் ஆங்கிலத்திலும் 'பிரகடண ஆவணத்தை வாசித்தார்.



*மலேசியா, புரூணை, சிங்கப்பூர், பாக்கிஸ்தான். இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆயர்களும் பேராயர்களும்*

ஒரு திருத்தலமானது அதன் வரலாற்று மதிப்பு, தொன்மை, கட்டிடக்கலை, கலை வேலைப்பாடு மற்றும் சிறப்பு வழிபாட்டு மையமாக அமைந்திருப்பது இவற்றின் அடிப்படையில் ஒரு சிறிய (மைனர்) பசிலிக்கா என்று தர உயர்வு பெறுகிறது என்பது பகிரப்பட்டது.

சிங்கப்பூரின் கர்தினால், வில்லியம் கோ அவரது மறையுரையில், கிறிஸ்துவின் பாட்டியான புனித அன்னம்மாள் ஒரு சிறந்த பரிந்துரையாளர் என்றும், குறிப்பாக திருமணமான மற்றும் திருமணமாகாதப் பெண்கள் தங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் அவரின் பரிந்துரையை நாடுகிறாரகள் என்றும் கூறினார். கத்தோலிக்கரல்லாதவர்களும் புனித அன்னம்மாளின் பரிந்துரை உதவியை நாடுகிறார்கள் என்றும், இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன என்றும் விவரித்தார். இதனிமித்தம், பலருக்கு அமைதி, ஆறுதல் மற்றும் குணமளிக்கும் சரணாலயமாக மாறியுள்ள இந்த மைனர் பசிலிக்கா உண்மையிலேயே நல்லிணக் கத்தின் ஆலயமாகும் என்ற பகழாரம் சூட்டினர்.

நிறைவாக, மலேசியாவுக்கான திருத் தந்தையின் தூதர் பேராயர் உயர்மிகு Wojciech Zaluski அவர்கள், அவர்தம் உரையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆசீரையும் வாழ்த்தையும் பகிர்ந்துகொண்டார். புனித அன்னாள் மீதும் அவர் வழிபடும் கடவுள் மீதும் கொண்ட அன்பும் மரியாதையின் காரணமாக, இத்திருத்தலத்திற்கு வரும் திருப்பயணிகள் இனம், மதம் மற்றும் தேசியம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனவைரையும் வரவேற்று ஆதரிப்பதே இந்த இதிருத்தலத்துற்கு மைனர் பசிலிக்கா பட்டத்தைக் கோருவதன் முதன்மை நோக்கமாக இருந்தது என்று பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் செபஸ்தியன் கூறினார். தொடர்ந்து அவர், இந்த மைனர் பசிலிக்கா, அனைவருக்கும் ஓர் அடைக்கலமாகவும் நம்பிக்கையின் அடையாளமாகவும், உறவு பாலமுமாகவும் திகழ்கிறது என்று பெருமிதம் கொண்டார்.

அவர் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டுக்கான பினாங்கு நூற்றாண்டு பாரம்பரிய சிறப்பு விருதை மூன்று கத்தோலிக்க ஆலயங்களுக்கு வழங்கியதற்காக பினாங்கு மாநில அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

# பேரருட்தந்தை (Msgr) ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களின் 80-ஆம் அகவை விழா திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது

**கோலாலம்பூர்:** கடந்த திங்கட்கிிமை, 23 சனவரி 2023 அன்று, மாலை மணி 5.30க்குத் தொடங்கிய நன்றி திருப்பலியுடன் தமது 80-ஆம் ஆண்டு பிறந்தநாளைக் கொண்டா டினார் பேரருட்தந்தை (Msgr) ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்கள். கடந்த 2018-ஆம் ஆண்டில், தமது குருத்துவத்தின் பொன் விழாவைக் கொண்டாடிய இவர், 23 சனவரி 1943-ஆம் ஆண்டு பிறந்தவராவார்.

சிரம்பான் நகரைத் தமது தாயகமாகக் கொண்ட இவர், 1968-ஆம் ஆண்டு அருள்பணியாளராக அருள்பொழிவுப் பெற் றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு பன்மொழியாளர். ஆங்கிலம், எபிரேயம் ஆகியவற்றோடு தமிழையும் நன்கு கற்றுத்தேர்ந்தவர். விவிலியத் துறையில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் கொண்ட இவர், பினாங்கு குருத்துவக் கல்லூரியில் வெகுகாலம் அதன் முதல்வராகவும் பேரா சிரியராகவும் பணியாற்றினார். பிற்காலத்தில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் புனித யோவான் பேராலம், புனித பத்திமா பங்கு, மெந்தகாப் இடைவிடா சகாய அன்னை பங்கு போன்ற, மற்றும் சில பங்குகளில் சிறப்பாக பங்குத் தந்தையாகப் பணியேற் றிருந்தார்.

மேலும் மலேசியாவின் பல பங்குகளில் '100 வாரம்' விவிலியப் பயிற்சியை அறிமுகப் படுத்தி, பல பொதுநிலையினரை விவிலியப் பணியில் ஊக்குவித்தார். ஆர்வமுள்ள பலரை தமிழ்நாட்டிற்கும் அனுப்பி விவிலியப் பயிற்சியில் பங்குபெற ஆவன செய்தார்.



*புனித யோசேப்பு பங்கின் வயது முதிர்ந்த சகோதரியிடமிருந்து பங்கின் அன்பளிப்பைப் பெறுகிறார் பேரருட்தந்தை*

இவர் அன்பும் கண்டிப்பும் கலந்த ஓர் உன்னத மனிதர். `**என் கடன் பணி செய்து கிடப்பதே**' எனும் கூற்றின்படி வாழ்ந்து கொண்டிருப்பவர். இப்போது ஓய்வுப்பெற்ற அருள்பணியாளராக, செந்தூல் புனித யோசேப்பு பங்கில் தங்கியுள்ளார். அப்பங் கின் பங்குத்தந்தை அருள்பணி பெஃடரிக் ஜோசப் அவர்களின் பெருமுயற்சியில் அப்பங்கு மக்கள் இவரது 80-வது பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந்தனர்.

பல அருள்பணியாளர்கள், ஓய்வுப்பெற்ற பேராயர் முர்ஃபி பாக்கியம், பேராயர் ஜூலியன் லியாவ் இவர்களோடு இவரது குடும்பத்தாரும், பங்கு மக்கள் ஏற்குறைய ஆயிரம் பேர் உட்பட பலர் கலந்து இவ்விழாவைச் சிறப்பித்தனர்.

-ஆர்.கே.

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அருள்பணியாளர் மேய்ப்புப்பணி ஆண்டு கூட்டம் (CAPA)

**போர்ட்டிக்சன்:** அருள்பணியாளர்களின் வருடாந்திர மேய்ப்புப்பணி கூட்டத்திற்காக அறுபது அருள்பணியாளர்களும் இரு அருள்பணி மாணவர்களும் கடந்த மாதம் சனவரி 16 முதல் 18 வரை இங்குள்ள மெதடிஸ்ட் மையத்தில் கூடினர். அன்று, நிகழ்த்திய தலைமையுரையில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள், இக்கூட்ட மானது அருள்பணியாளர்கள் தங்களின் அருள்பணி வாழ்வில் எதிர்நோக்கும் தற்போதைய சவால்கள், பிரச்சனைகள் குறித்து ஆழமாக சிந்திக்க வழிவகுக்கும் என்று விவரித்தார்.

மேலும், இதுவரை ஒருங்கியக்க ஆயர் மாமன்றத்தின் அனைத்து அளவிலான ஆய்வுகளின் தொகுப்பை ஆய்ந்து அறியவும் இந்த ஆண்டு கூட்டம் ஒரு தளமாக அமையும் என்றும் குறிப்பிட்டார் பேராயர். தொடர்ந்து, மேற்கண்ட CAPA பேரவையின் ஒருங்கிணைப்பு மற்றும் சொற்பொழிவாளர்கள் குழுவில் பினாங்கு மறைமாவட்டத்தின் Msgr ஜூட் மிராண்டா, குருத்துவக் கல்லூரி முதல்வர் அருள்தந்தை சைமன் லப்ரோய் மற்றும் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அருள்தந்தை சுரேன் துரைராஜ் ஆகியோர் பொறுப்பேற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில் சினோடலிட்டி எனும் கூட்டு ஒருங்கியக்க ஆயர் பேரவை பற்றியும், அருள்பணியாளர்களின் திருப்பணி, மற்றும் அருள் பணியாளர்கள் மத்தியில் உறவு, அருள்பணியாளர்களின் பணி வாழ்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டு மூன்று பிரிவுகளில் கவனம் செலுத்தப்பட்டது. முதல் அங்கமாக, முன்னரே பதிவு செய்யப்பட்ட காணொளிச் செய்தியில், ஓய்வுபெற்ற ஆயர் மேதகு அந்தோணி செல்வநாயகம் அவர்கள் மூன்று தலைப்புகளுக்கும் வழிகாட்டுதலை வழங்கினார். சினோடலிட்டி என்ற தலைப்பில், அதன் ஆய்வுகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட கண்டுபிடிப்புகளைக் கவனமாகக் கேட்டு பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அடுத்து, ஆயர் செல்வநாயகம் அவர்கள், "நமது குருத்துவப் பணிக்காக நாம் கருத்தில் கொள்ளக்கூடிய சிறப்பு அம்சங்கள், நமது உறவு தரத்தை ஆராய்வதும், பரிவோடு செவிசாய்ப்பதும், மேலும் அனைவரையும் உள்ளடக்கியவர்களாக இருக்கக் கற்றுக்கொள்வதுமாகும் என்று கருத்துரைத்தார். குருத்துவம் என்ற தலைப்பில், ஆயர் செல்வநாயகம், "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம், இறுதி இராவுணவில் நற்கருணையுடன் சேர்ந்து குருத்துவம் ஏற்படுத்தப்பட்டதை நினைவூட்டினார். மேலும், "அருள்பணியாளர்களாகிய நாம் எப்பொழுதும் அருளடையாளங்களைக் கொண்டாட தயாராக இருப்பதோடு, ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்றும், மக்களுக்குச் செவிசாய்க்க மறக்கக்கூடாது" என்பதையும் வலியுறுத்தினார்.

இறுதியாக, அவர் அருள்பணியாளர்களின் பாவத்தையும் அவர்களின் குற்றங்குறைகளையும் நினைவுபடுத்தினார். அருள்பணியாளர்கள் 'அவர்கள்தான் திருஅவை' என்றும், அவர்கள்தான் திருஅவையின் "மையம்" என்று செயல்படும்போது, அவர்கள் மக்களுக்குச் செவிசாய்ப்பதை நிறுத்துகிறார்கள் என்ற கருத்தைத் வெளிப்படுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற அமர்வில், Msgr ஜூட் மிராண்டா அவர்கள், 'சினோடல்' எனப்படும் கூட்டு ஒருங்கியக்க ஆயர் மாமன்ற செயல்முறையானது ஓர் அனுபவம், அது ஒரு நிகழ்வு அல்ல" என்பதைத் தெளிவுபடுத்தினார்.

அடுத்து, அருள்தந்தை சைமன் லெப்ரோய் அவர்கள், சினோடலிட்டி ஆய்வில் ஆசிய கண்ட அளவில் பயன்படுத்தப்பட்ட திருஅவையை வெளிப்படுத்தும் ஒரு கூடாரத்தின் சின்னம் கொண்ட: "உங்கள் கூடாரத்தின் இடத்தை விரிவுபடுத்துங்கள்" (எசா 54:2) என்பதை வெளிப்படுத்தினார். வார்த்தையானவர் நம்மிடையே வாழ்ந்தார் என்பதைவிட அவர் நம்மிடையே கூடாரம் போட்டார் – அவரது பேழை நம் மத்தியில் உள்ளது எனும் உண்மை கருத்தை வெளிப்படுத்தினார்.

Msgr ஜூட் மிராண்டா அவர்கள், பின்னர் ஒரு அமர்வில், திருஅவை ஒரு கூடாரமாக கூட்டு ஒருங்கியக்கப் பயணம் (சினோடலிட்டி) எனும் மனப்பான்மையில் உறவை வளர்க்கும் நோக்கம் கொண்டிருக்க வேண்டும். ஒரு செயல்பாட்டு (functional) மற்றும் தொழில் சார்ந்த முறையிலிருந்து விடுபட்டு இறைவனுடனும் மற்றவர்களுடனும் தனிப்பட்ட உறவு கொண்டு வாழ வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரையாடலை வளர்க்குமாறு திருஅவையை வலியுறுத்தி வருகிறார் என்பதை நினைவூட்டினார்.

நிறைவாக, நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவின் ஓர் அங்கத்தினரான அருள்தந்தை சுரேன் துரைராஜ் அவர்களும் அருள்பணியாளர்களின் இந்த மேய்ப்புப்பணி பொதுக்



பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுடன் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அருள்பணியாளர்கள்

இருக்க வேண்டும் என்றும், தந்தையாம் கடவுள் தொடர்ந்து விரிவடைந்து வரும் ஒரு திருஅவையைப் பார்ப்பவராக இருக்க வேண்டும் என்றும் கருத்தைப் பரிந்துரைத்தார் இதற்கு பன்முகத்தன்மையை வரவேற்கும், அங்கீகரிக்கும் மற்றும் கொண்டாடும் மனப்பான்மை நம்மிடையே தேவை எனும் கருத்தை முன்வைத்தார்.

தொடர்ந்த அவரது பகிர்வில், அருள்பணியாளர்களாகிய நாம், நம்மிடையே கூட்டத்தைப் பற்றி பகிர்ந்து கொண்டார். "இந்த CAPA ஏற்கனவே நமக்குள் இருக்கும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது – அருள்பணியில் ஒத்துழைப்பு மற்றும் அருள்பணி வாழ்வில் நட்பு போன்ற உண்மையான உறவுகளை உருவாக்குவது சவால் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், நாம் நமது இறைமக்கள் மத்தியல் பொதுவான பகுத்தறிவுடன் நடந்துகொள்ள வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

## ஈப்போ, புனித லூர்து அன்னை பங்கில் பாரம்பரிய பொங்கல் விழா

ஈப்போ, புனித லூர்து அன்னை தேவாலய வளாகத்தில், கடந்த 15.1.2023 பிற்பகல் மணி 2.30க்கு, தமிழ் கலாச்சார குழுவினரால் 30ம் ஆண்டு பாரம்பரிய பொங்கல் கலை விழாவோடு பங்கு தந்தை ரோபர்ட் டேனியல் அவர்களின் நல்லாசியோடும், மறைதந்தை ஸ்டேன்லி அந்தோணி அவர்களின் பங்கேற்போடும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் பங்கு மக்களோடு இணைந்து பிற சமயத்தவரும் கலந்து சிறப்பித்தனர்.

திருத்தொண்டர் சந்தனசாமி அவர்களின் இறைவேண்டலோடு தொடங்கிய இக்கொண்டாட்டத்தில், நடனம், சிலம்ப ஆட்டம், பொங்கல் சிறப்புரை, மாணவர் முழக்கம், நகைச்சுவை, கிராமிய கதம்ப



*பொங்கலிடும் பங்கின் சகோதரிகள்*

நடனம், பலூன் உடைத்தல், கயிறு இழுத்தல் மற்றும் உறியடித்தல் போன்ற பல்வகை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

நிறைவாக, இக்கொண்டாட்டங்களில் பங்கேற்ற அனைவருக்கும் கலாச்சார குழுவின் தோற்றுனரும் ஆலோசகருமான திருமதி அன்னகிளி இராசையா அவர்கள் மற்றும் தலைவர் திரு கிறிஸ்டோபர் அவர்களும், பங்குத்தந்தையும் தங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

*-குலோரியா இராசையா*

## நாமே மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியுமாவோம்!

பொதுக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறான இன்று நாம் வாசிக்கக்கேட்கும் இறை வார்த்தைகள், நாம் இந்த மண்ணுலகிற்கு உப்பாக, ஒளியாக இருக்க முடியும் என்பது உறுதி என்ற சிந்தனையைத் தருகின்றது.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் "உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக் காட்டி குற்றம் சாற்றுவதையும், பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்தோருக்கு உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவுசெய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும்; இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்" என்று கடவுள் அறிவுறுத்துகிறார். ஆம், நாம் அடுத்தவரைப் பற்றிய அக்கறையோடு, அடுத்தவர் குறித்த நல்ல எண்ணத்தோடு வாழும்போது நம்முடைய வாழ்வு ஒளிமயமானதாக இருக்கும்; நாம் உலகிற்கு ஒளியாக இருக்க முடியும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாக, ஒளியாக இருக்கின்றீர்கள் என்று கூறுகின்றார். உப்பு தன்னைத்தானே அழித்து, உணவுக்கு சுவை அளிக்கிறது. அது குழம்பிலுள்ள அனைத்து காய்க்கறிகளோடும் சம அளவில் சேர்வதோடு, அது எதையும் ஒதுக்குவதில்லை. மேலும். தன்னால்தான் குழம்பு சுவைக்கிறது என்று பெருமை பாராட்டுவதுமில்லை. ஒளியோ எப்போதும் பிறருக்கு வழிகாட்டுவதோடு, எப்போது நேர்கோட்டிலேயே பயணம் செய்யும். அது வளைந்து கொடுக்காது. அப்படியானால் இயேசு இன்று நம்மைப் பார்த்து நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய், ஒளியாய் இருக்கிறீர்கள் என்று கூறுகின்றார் என்றால், அவர்கள் தங்களை இழந்து, நேர்மையாக வாழ்ந்து, விண்ணகத் தந்தைக்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்பதுதான் இதன் பொருளாக இருக்கின்றது.

சீடத்துவ வாழ்வில் இழத்தல் என்ற பண்பு முக்கிய இடம் வகிக்கின்றது. "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும்; மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா 12: 24) என்று சொல்லும் இயேசு, நாம் நம்மை இழக்கின்றபொழுது மட்டுமே உலகிற்கு உப்பாக ஒளியாக இருக்க முடியும் என்று கூறுகின்றார்.

மேலும், இயேசு, "எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின்மீதே வைப்பர்" என்று கூறுகின்றார். ஆம், உலகிற்கு உப்பாக, ஒளியாக இருக்கவேண்டியவர்கள் பிறருக்கு அஞ்சி தங்களுடைய கிறிஸ்தவ அடையாளத்தை மறைத்துக்கொண்டு வாழ இயலாது. அப்படி வாழ்ந்தார்கள் எனில், அவர்களால் உலகிற்கு ஒளியாக, உப்பாக இருக்க முடியாது. அவர்கள் ஆண்டவருக்கு மட்டுமே அஞ்சி, அவருக்குச் சான்று பகர்ந்து வாழவேண்டும்.

'வாழ்க்கை என்பது தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பது, அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பது அன்று' என்பார் விக்டர் பியூக்கோ என்ற அறிஞர். அதேபோன்று 'அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டே நம் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதுதான் வாழ்க்கைமுறை' என்பார் மெக்கனல் என்ற அறிஞர். எனவே, வாழ்க்கை என்பதே பிறருக்காக வாழ்வதுதான் என்பதை இரண்டு அறிஞர்களும் சுட்டிக்காட்டுகிறார்கள். 'நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்' (பிலி 2:4) எனும் புனித பவுல் அடிகளின் ஆலோசனையின்படி வாழ முற்படுவோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

### ஆண்டின் பொதுக்காலம் 5-ம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசா 58: 7-10 |
| தி. பாடல்: | 112: 4-5. 6-7. |
| வாசகம்: | 1 கொரி 2: 1-5 |
| நற்செய்தி: | மத் 5: 13-16 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**